2013 ஏப்ரல் 15]

பொருளாதார மண்டலங்களின்மூலம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 3,75,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 7.50,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கப் பெற்றுள்ளது.

முற்பகல் 11–30

மேலும், இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் முழுமையாகப் பங்கேற்கத் தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது. தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் அமைக்க வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

222—

மாணவர் விடுதி

***2896—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, இராயக்கோட்டை பகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 15

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, இராயக்கோட்டை பகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் உள்ளது இராயக்கோட்டை ஊராட்சி. இது ஒரு பெரிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சியைச் சுற்றிலும் சுமார் 15–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 15 கிலோ மீட்டரிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள கிராமங்களிலிருந்து அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டுமென்று சொன்னால், மாணவர்களெல்லாம் இராயக்கோட்டைக்கு வந்துதான் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தற்போது இராயக்கோட்டையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,400–க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த மாணவர்களெல்லாம் தினமும் அவர்களுடைய சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. இராயக்கோட்டையிலே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கான தங்கும் விடுதி இல்லை. ஆகவே, ஒரு தங்கும் விடுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உருவாக்கித் தருவார்களா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் ஒரு பொற்கால ஆட்சி நடத்திவரும் தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், மக்களுக்கு திட்டங்கள் சென்றடைய வேண்டும், மக்கள் பயன்பெற வேண்டும், 'மக்களுக்காகத்தான் திட்டங்கள், திட்டங்களுக்காக மக்கள் அல்ல' என்ற அருமையான ஒரு தத்துவத்தை எடுத்துரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ, மாணவிகளும் கல்வியை நன்றாகப் பயில வேண்டும், அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, ஒரு மாபெரும் புரட்சியை தமிழகத்தில் செய்து வருகின்றார்கள். அந்த வகையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒருசில மாதங்களிலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டமான கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மட்டும் 4 விடுதிகள் துவங்குவதற்கு ஆணை பிறப்பித்துள்ளார்கள். 2011–2012 ஆம் ஆண்டில் பர்கூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கான, கல்லூரி மாணவியர் விடுதி ஒன்றும், தேன்கனிக்கோட்டையில் சிறுபான்மையின பள்ளி மாணவியர் விடுதி ஒன்றும் துவங்க ஆணையிட்டு, அவ்விடுதிகள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. 2012–2013 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி ஒன்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பாலிடெக்னிக் மாணவியர் விடுதி ஒன்றும் துவங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு அவசியம் இருப்பின், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் கல்வியிலே மிகவும் பின்தங்கிய

மாவட்டம் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதுவும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, தேன்கனிக்கோட்டை, ஒசூர் பகுதிகள் கல்வியிலே மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. மாணவர்கள் எல்லாம் மேல்நிலைப் பள்ளிக்கு சுமார் 20 கி.மீ. தூரம் வரை பயணித்து இராயக்கோட்டை வந்துதான் செல்ல வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இராயக்கோட்டை பகுதியிலே மாணவர்களுக்கான ஒரு தங்கும் விடுதியை அமைத்துத் தரவேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய பொன்மனத்தாய் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லையென்று சொல்லுவதில்லை" என்ற பாடலுக்கு ஒப்ப, அவையில் வைக்கப்படும் அனைத்துக் கோரிக்கைகளையும் இல்லையென்று சொல்லாமல், நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில், தாமரைக்கிளை என்ற இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2013 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதியில் விடுதி கட்டுவதற்கான அவசியமிருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

223—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***3087—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை பணிவோடு வணங்குகின்றேன். கோவை மாவட்டம், சூலூர் வட்டத்திற்குச் சொந்தமாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட, சூலூர் வட்டம், சூலூர் கிராமம், புல எண் 543/1ஏ–ல் 0.60.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், சூலூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறையின் மூலமாக 260.15 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்பீடு பெறப்பட்டு, 2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், மாண்புமிகு